ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 2.1 – மெச்சூது

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.1 – மெச்சூது

‡ மெச்சூது சங்கம் இடத்தான் ⋆ நல் வேய் ஊதி ⋆
பொய்ச் சூதில் தோற்ற ⋆ பொறை உடை மன்னர்க்காய் ⋆
பத்தூர் பெறாதன்று ⋆ பாரதம் கைசெய்த ⋆
அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.1** ‖

மலை புரை தோள் மன்னவரும் ⋆ மாரதரும் மற்றும் ⋆
பலர் குலைய ⋆ நூற்றுவரும் பட்டழிய ⋆ பார்த்தன்
சிலை வளையத் ⋆ திண் தேர்மேல் முன்னின்ற ⋆ செங்கண்
அலவலை வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.2** ‖

காயும் நீர் புக்குக் ⋆ கடம்பேறி ⋆ காளியன்
தீய பணத்தில் ⋆ சிலம்பார்க்கப் பாய்ந்தாடி ⋆
வேயின் குழல் ஊதி ⋆ வித்தகனாய் நின்ற ⋆
ஆயன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.3** ‖

இருட்டில் பிறந்து போய் ⋆ ஏழை வல் ஆயர் ⋆
மருட்டைத் தவிர்ப்பித்து ⋆ வன் கஞ்சன் மாளப்
புரட்டி ⋆ அந்நாள் எங்கள் ⋆ பூம் பட்டுக் கொண்ட ⋆
அரட்டன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.4** ‖

சேப்பூண்ட ⋆ சாடு சிதறித் ⋆ திருடி நெய்க் -
காப்பூண்டு ⋆ நந்தன் மனைவி கடை தாம்பால் ⋆
    சோப்பூண்டு ⋆ துள்ளி துடிக்கத் துடிக்க ⋆ அன் -
றாப்பூண்டான் அப்பூச்சி காட்டுகின்றான் ⋆
    அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.5** ‖

செப்பிள மென்முலைத் ⋆ தேவகி நங்கைக்கு ⋆
சொப்படத் தோன்றித் ⋆ தொறுப்பாடியோம் வைத்த ⋆
    துப்பமும் பாலும் ⋆ தயிரும் விழுங்கிய ⋆
அப்பன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
    அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.6** ‖

தத்துக் கொண்டாள் கொலோ ⋆ தானே பெற்றாள் கொலோ ⋆
சித்தம் அனையாள் ⋆ அசோதை இளஞ்சிங்கம் ⋆
    கொத்தார் கருங்குழல் ⋆ கோபால கோளரி ⋆
அத்தன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
    அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.7** ‖

கொங்கை வன் ⋆ கூனிசொற் கொண்டு ⋆ குவலயத்
துங்கக் கரியும் ⋆ பரியும் இராச்சியமும் ⋆
    எங்கும் பரதற்கருளி ⋆ வன் கான் அடை ⋆
அங்கண்ணன் அப்பூச்சி காட்டுகின்றான் ⋆
    அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.8** ‖

பதக முதலை வாய்ப் ⋆ பட்ட களிறு ⋆
கதறிக் கைகூப்பி ⋆ என் கண்ணா ! கண்ணா ! என்ன ⋆
    உதவப் புள் ஊர்ந்து ⋆ அங்குறுதுயர் தீர்த்த ⋆
அதகன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
    அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.9** ‖

‡ வல்லாள் இலங்கை மலங்கச் ⋆ சரந் துரந்த ⋆
வில்லாளனை ⋆ விட்டுசித்தன் விரித்த ⋆
சொல் ஆர்ந்த அப்பூச்சிப் பாடல் ⋆ இவை பத்தும்
வல்லார் போய் ⋆ வைகுந்தம் மன்னி இருப்பரே ॥ **2.1.10** ॥

அடிவரவு — மெச்சு மலை காயும் இருட்டில் சேப்பூண்ட செப்பு தத்து கொங்கை பதகம் வல்லாள் அரவணையாய்

மெச்சூது முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்